**அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி**

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறுதரமதிப்பீட்டிலும் “ஏ” தகுதி பெற்றது)

நாள் : 28.3.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக யோகா மையம், மஹா யோகம், காஞ்சிபுரம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழக சிறப்புக் கல்வியியல் மற்றும் புணர்வாழ்வு அறிவியல் துறையின் கீழ் இயங்கி வரும் சிறப்பு பள்ளி குழந்தைகளுக்கான தகவமைக்கப்பட்ட யோகா பயிற்சியின் துவக்க விழா இன்று (28-3-2017) பல்கலைக்கழக சிறப்பு பள்ளி மையத்தில் நடைபெற்றது.




அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று உரையாற்றுகையில், கடவுளின் குழந்தைகளாக கருதப்படும் இந்த சிறப்பு குழந்தைகளுக்கு காஞ்சிபுரம், மஹா யோகம் அமைப்பிலிருந்து யோகிகளும், ரிஷிகளும் யோகா கற்றுத்தர வந்திருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் தட்சசீலத்தில் நிறுவப்பட்டுள்ள நாலந்தா பல்கலைக்கழகம் உலகப் புகழ்பெற்று விளங்கியது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து யோகா, ஆயுர்வேதம், கணிதம் போன்ற பாடங்களை கற்றுக் கொள்ள வெளிநாட்டினர் போட்டி போட்டுக் கொண்டு இங்கு வந்தனர். நாலந்தா பல்கலைக்கழகத்தில் 10,000 மாணவர்கள் தங்கி படிக்ககூடிய அளவில் வசதிகள் இருந்தது என்றும், 2000 ஆசிரியர்கள் பணியாற்றினர் என்றும் குறிப்பிட்டார். இந்தியா உயர்கல்வியில் சிறப்புற்று திகழ்ந்தது என்பதற்கு இதுவே ஒரு சிறந்த சான்றாகும் என்றார். சிறப்புக் குழந்தைகளுக்கான தகவமைக்கப்பட்ட யோகா பயிற்சியை முதன் முதலில் வழங்குவது அழகப்பா பல்கலைக்கழகமே என்பது குறிப்பிடத்தக்கது.



இந்நிகழ்ச்சியில் காரைக்குடி எலும்பு முறிவு மருத்துவர் டாக்டர் சலீம் வாழ்த்துரை வழங்கினார். காஞ்சிபுரம் மஹா யோக அமைப்பைச் சார்ந்த திரு. ரமேஷ் ரிஷி இப்பயிற்சியினை தொடக்கி வைத்து உரை நிகழ்த்தினார். திரு. யோகி பல்ராம் மற்றும் கே.பி. ரஞ்சனா, வழக்கறிஞர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மஹா யோக அமைப்பைச் சார்ந்த காரைக்குடி உறுப்பினர்கள் தினமும் இப்பள்ளிக்கு வருகை தந்து சிறப்புக் குழந்தைகளுக்கு காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை ஒரு மணி நேரம் யோக பயிற்சி அளிக்க உள்ளார்கள். சிறப்பு குழந்தைகளுக்கான இந்த யோகா பயிற்சி அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தினை ஏற்படுத்தவல்லது. இப்பயிற்சியின் மூலம், அவர்களுடைய செயல்பாடுகளில் முன்னேற்றத்தினை நாம் கொண்டுவர முடியும்.

யோகா மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சரோஜா அனைவரையும் வரவேற்றார். சிறப்பு பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் ஜெ. சுஜாதா மாலினி நன்றி கூறினார்.

பேரா. வி.பாலச்சந்திரன்

பதிவாளர் (பொ.)